# ஆயுத விற்பனையாளர் கவனம் இலங்கை பக்கம்!

விலை ரூபா 5.00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆனி 13 இதழ் 137
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 27 — 06 — 1992

[கொழும்பு]
உலகின் பல்வேறு பகுதிகளிலுமுள்ள ஆயுத விற்பனையாளர்களின் கவனம் தற்போது இலங்கையின் பக்கம் திரும்பியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.
இலங்கை அதன் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் மேற்

(4ம் பக்கம் பார்க்க)

## படையினர் சுட்டதில் 12 தமிழர் காயம்

[மட்டக்களப்பு]
மட்டக்களப்பு பளுகாமம் பகுதியில் நேற்று முன்தினம் சிறீலங்காப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 12 தமிழர் காயமடைந்துள்ளனர். அத்துடன் தமிழ் இளைஞர்கள் பலர் பலவந்தமாக இராணுவமுகாமுக்குக்

[4-ம் பக்கம் பார்க்க]

## போலி குடியேற்றத்தைத் தடுக்க கனடாவில் புதிய சட்டம்

[ஒட்டாவா]
போலி குடியேற்றத்தைத் தடுப்பதற்கு புதிய சட்டம் ஒன்று கனடாவில் கொண்டுவரப்பட்டுள்ளது.
கனடாவின் குடியேற்ற விதிகளுக்கு மாறாக அந்தநாட்டு

(4-ம் பக்கம் பார்க்க)

### மனித உரிமை மீறல்களைக் கண்டித்து

# வெளிநாட்டில் உள்ள சிங்களவர் இலங்கை அரசுக்கு எதிராகப் போர்க்கொடி!

(பாரிஸ்)
வெளிநாடுகளில் வசிக்கும் சிங்களவர்கள் இலங்கை அரசு மேற்கொண்டுவரும் மனித உரிமை மீறல் சம்பவங்களைப் பலமாகக் கண்டிப்பதென முடிவு செய்துள்ளனர்.

பிரான்சில் வசிக்கும் சிங்களவர் ஆரம்பித்துள்ள மனித உரிமை இயக்கத்தின் கூட்டம் ஒன்றில் இதற்கான முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

இலங்கையில் மனித உரிமை மீறல் சம்பவங்கள் பரவலாக இடம்பெற்று வருவதாகத் தமக்குத் தகவல் கிடைத்திருப்பதாகவும் இது குறித்துத் தாம் அதிக கவலை அடைந்திருப்பதாகவும் இவற்றுக்கு எதிராகத் தாம் போர்க்கொடி உயர்த்த முடிவு செய்திருப்பதாகவும் பிரான்சிலுள்ள மேற்படி இயக்கத்தின் முக்கிய பிரமுகர் ஒருவர் அண்மையில் பி. பி. ஸி. க்கு தெரிவித்திருந்தார்.

இலங்கையில் நடக்கும் மனித உரிமை மீறல் சம்பவங்

[4ம் பக்கம் பார்க்க]

## ராவின் நடையில் திணறிய பாதுகாப்பு அதிகாரிகள்

[றியோடிஜெனரோ]
இந்தியப் பிரதமர் பி. வி. நாசிம்மராவின் வேகநடைக்கு ஈடுகொடுக்க முடியாமல் பிறேசில் பாதுகாப்புத்துறை அதிகாரிகள் திண்டாடிய சுவையான சம்பவம் பிறேசில் நாட்டில் அண்மையில் இடம்பெற்றது.

(4ம் பக்கம் பார்க்க)

## ஜெயலலிதாவுக்கு கருணாநிதி சவால்!

(சென்னை)
"தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா விரும்பினால் என்மீது வழக்குத் தொடர்ந்து பார்க்கட்டும். அவரை நீதிமன்றத்தில் சந்திக்க நான் தயாராகவுள்ளேன். அவர் பற்றிய சகல குற்றச்சாட்டுகளுக்கும் என்னிடம் தக்க ஆதாரங்கள் உண்டு."

தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதி இவ்வாறு தெரிவித்துள்ளார். தி மு. க. மீது தமிழக முதல்வர் தெரி

[4-ம் பக்கம் பார்க்க]

## கொழும்பு துறைமுகத்தில் தீ விபத்து!

(கொழும்பு)
கொழும்புத் துறைமுகத்தில் கடந்த புதன்கிழமை ஏற்பட்ட தீவிபத்தில் கப்பல்களும் பொருட்களும் எரிந்து சேதமடைந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

துறைமுகத்தில் நங்கூரமிட்டிருந்த ஹொங்கொங் நாட்டுச் கப்பல் ஒன்றில் திடீரென தீ பற்றிக் கொண்டதினால் இக்கப்பல் பலத்த சேதமடைந்தது. இதன் அருகில் நின்ற இருகப்பல்களிலும்

(4ம் பக்கம் பார்க்க)

## கொள்ளையரிடம் நவீன ரக ஆயுதங்கள்!

(கொழும்பு)
நாட்டின் பல பகுதிகளிலும் அண்மையில் நடைபெற்ற பல்வேறு கொள்ளைச்சம்பவங்களில் கொள்ளையர்கள் மிக நவீனரக ஆயுதங்களைப் பாவித்து வந்துள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இதனால் பொலிசாரை தயார்நிலையில் இருக்கும்படி சகல பொலிஸ் நிலையங்களுக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது.

பெரும்பாலும் கொழும்பில் இக்கொள்ளைச்சம்பவங்கள் அண்மைக்காலங்களில் அதி

[4ம் பக்கம் பார்க்க]

## படையினர் மூலம் சிங்களவர் முஸ்லிம்கள் மத்தியில் தமிழர் பலவந்தமாக குடியேற்றம்!

[திருமலை]
திருகோணமலை - தம்பலகாமம் அகதிமுகாமிலிருந்து 150 தமிழ்க் குடும்பங்கள் பலவந்தமாக சிங்களவர், முஸ்லிம்கள் மத்தியில் குடியேற்றப்பட்டுள்ளன.

இவ்வாறு பலவந்தமாக ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் குடியமர்த்தப்படும் தமிழ்க் குடும்பங்களுக்கு அ

(4ம் பக்கம் பார்க்க)

## யாழ்மாவட்டத்தில் ஊரடங்கு

[கொழும்பு]
யாழ் மாவட்டத்தில் தீவுப் பகுதிகள் தவிர்ந்த ஏனைய இடங்களிலும் மற்றும் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலும் இன்று சனிக்கிழமை காலை ஆறு மணி தொடக்கம் மறுஅறிவித்தல் வரை ஊரடங்கு உத்தரவு அமுலில் இருக்குமென கூட்டுப்படைத் தலைமையகம் நேற்று அறிவித்தது. (க)

### அரசுக்கு எதிராக

## ஜூலை முதலாம் திகதி மக்கள் சப்தஒலிகளை எழுப்புவர்

[கொழும்பு]
ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஜூலை மாதம் முதலாம் திகதி மக்கள் சப்த ஒலிகளை எழுப்பும் இயக்கத்தை அரசுக்கு எதிராக முதற்கட்டமாக ஆரம்பிக்கவிருப்பதாக ஹம்பாந்தோட்டை மாவட்ட ஸ்ரீ. ல. சு. கட்சி எம். பி. மகிந்தராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பு பொரளைச் சந்திகண் ஆஸ்பத்திரி, பம்பலபிட்டி ஆகிய இடங்களிலும் மற்றும் கொழும்பு மாநகரில் தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களிலும் ஜூலை மாதம் முதலாம் திகதி மதியம் 12-30மணியளவில் மக்கள் பல்வேறுசப்த ஒலிகளை எழுப்ப விருப்பதாக மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

நகரில் அலுமினிய பாத்திரங்களை தட்டி சப்தங்களை எழுப்பவுள்ளதாகவும் கிராமங்

[4-ம் பக்கம் பார்க்க]

## சீனுவில் 39 பேருக்கு மரண தண்டனை

[பீக்கிங்]
போதைவஸ்து சம்பந்தமான குற்றங்களைப் புரிந்த 39 பேருக்குச் சீனாவில் நேற்று மரணதண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

நேற்று உலக போதைவஸ்து ஒழிப்புத் தினம் என்பது குறிப்பிடத்தக்கது. (மா)

## வடக்கு-கிழக்கு யுத்தத்திற்கு தேசிய வருமானத்தில் 40 சதவீதம் செலவாகிறது

[கொழும்பு]
நாட்டின் தேசிய வருமானத்தில் நாற்பது சதவீதமான பங்கு வடக்கு - கிழக்கு யுத்தத்திற்காக செலவிடப்படுவதாக பிரதமர் திரு. டி. பி. விஜேதுங்கா தெரிவித்தார்.

அரசாங்க தேசிய தட்டெழுத்தாளர் சங்க வருடாந்த மாநாட்டில் நேற்று உரையாற்றுகையில் அவர் மேலும் கூறியதாவது:

[4-ம் பக்கம் பார்க்க]

## இராமசேவையாளர் பரீட்சை விரைவில் நடைபெறும்

(யாழ்ப்பாணம்)
யாழ். மாவட்டத்தில் தடைப்பட்ட கிராமசேவையாளர் பரீட்சை விரைவில் நடைபெறவுள்ளது.

இப்பரீட்சைக்கான ஏற்பாடுகள் மீண்டும் நடைபெற்று வருவதாகவும், இவை பூர்த்தியடைந்தவுடன் விரைவில் இப்பரீட்சை யாழ். மாவட்டத்தில் முன்னர் ஒழுங்கு செய்யப்பட்ட பரீட்சை நிலையங்களில் நடாத்தப்படுமென்றும், பரீட்சை ஆணையாளர் திரு. ஆதர் வேதமுல்ல தெரிவித்தார். (வி)

# வரி விளம்பரம்


### சுவையகம்

பேக்கரிகளில் தயாரிக்கப்படும் உணவு வகைகள் அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள் ''சுவையகம்'' பிரதான வீதி, (யூனியன் பெற்றோல் நிலைய அருகாமை) சாவகச்சேரி. (ஏ-2216)

### சோபிதா

பாடசாலை உபகரணங்கள், அலுவலக உபகரணங்கள், மொத்தமாகவும், சில்லறையாகவும் மலிவுவிலையில் பெற்றுக்கொள்ளலாம், 'சோபிதா' 363, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். (ஏ-2207)

### வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாத ரோகங்கள், வலிப்பு நோய், பீனிசம், தலையிடி, தலை, கால் அவியல், சருமநோய்கள், மாதவிடாய்க் குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு மூல வியாதிகள், மூதிர ரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியர் சி. இராசரத்தினம், 121, 2-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (சி6436)

### அறிவுக் களஞ்சியம்

இளைஞர்களின்–முக்கியமாக உயர் வகுப்பு மாணவர்களின் பொது அறிவை வளர்க்கவும், ஆர்வமுள்ள இளைஞர்களின் எழுத்தாற்றலைத் தூண்டவும் –முதல் இதழ் மிக விரைவில்! இது ஒரு 'வரதர் வெளியீடு'. [சி 6462]

### கல்வி

G. C. E. (O/L)ல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் இதுவரை சித்தியடையாதவர்களுக்கும் ஆரம்ப அறிவே இல்லாதவர்களுக்கும் 25 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலத்தில் அதி உயர் விசேட சித்திக்கும் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன். 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, சுண்டிக்குளி. (சி 6465)


## ஆட்டுக் கடாக்கள் திருட்டு

[பண்டத்தரிப்பு]

பண்டத்தரிப்புப் பகுதியில் இரவு வேளையில் இரு வீடுகளில் மூன்று ஆட்டுக் கடாக்கள், மர்மமான முறையில் திருடப்பட்டுள்ளன.

2,000 ரூபா பெறுமதியான ஆட்டுக் கடா ஒரு வீட்டிலும், தலா 1,500 ரூபா பெறுமதியான இரண்டு ஆட்டுக் கடாக்கள் மற்றொரு வீட்டிலும் திருடப்பட்டுள்ளன. [72]

## முச்சக்கரவண்டி அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

குருமபசிட்டிக் கிராமத்தைச் சேர்ந்த பிறப்பிலேயே ஊனமுற்ற வறிய குடும்பத்தைச் சேர்ந்த சீவரத்தினம் இரவீந்திரன் என்ற 18 வயது இளைஞருக்கு குரும்பசிட்டி சன்மார்க்க சபையின முச்சக்கர வண்டியொன்றினை அன்பளிப்பாக வழங்கினர்.


## மீண்டும் யாழ்ப்பாணத்தில்

யாழ். மாவட்ட

புடவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்

**தனது விற்பனை நிலையத்தை**

வாடிக்கையாளரின் நன்மை கருதி

**303, பலாலி வீதி, யாழ்ப்பாணத்தில்**

(பரமேஸ்வரா சந்திக்கு அருகில்)

திறந்துள்ளதென்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

பொதுமுகாமையாளர்,
யாழ். மாவட்ட
புடவை நெசவாளர் கூட்டுறவுச்சங்கம்,
இருபாலை வீதி, கோண்டாவில். (எ-2254)


## ஸ்கந்தவரோதயக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்

சுன்னாகம்

# பொதுக் கூட்டம்

1992/1993

மேற்படி பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டம், யூலாய் 19ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணிக்கு கல்லூரிப் பிரதான மண்டபத்தில் நடைபெறும். பழைய மாணவர்கள் தங்களது அங்கத்துவத்தைப் புதுப்பித்துக்கொள்ளுமாறும், இதுவரை சேராதவர்கள் அங்கத்தவர்களாகச் சேரும் வண்ணமும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மதிய உணவு ரூபா 30/-. பணத்தை 14-7-92இற்கு முன்னதாகச் செயலாளருக்கு அனுப்பிவைக்கவும்.

குறிப்பு: 5-7-92 ஞாயிறு மாலை 4-00 மணிக்கு நடைபெறும் நிர்வாக சபைக் கூட்டத்திற்கு, நிர்வாக சபை உறுப்பினர்கள் தயவுசெய்து சமுகம் கொடுக்கவும்.

ஆ, மகாலிங்கம் — தலைவர்.
சேது. விபுலானந்தா — செயலாளர்.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி
சுன்னாகம்.

(ஏ 2253)

## சுற்றுடல் பாதுகாப்பு; கட்டுரை, நாடகப் போட்டி

(யாழ்ப்பாணம்)

சுற்றுடல் சூழலை பாதுகாப்பது சம்பந்தமாக யாழ். மாவட்ட உதவி அரசாங்க அதிபர்களை உள்ளடக்கிய கூட்டமொன்று, யாழ். செயலகத்தில் அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் தலைமையில் நடைபெற்றது.

சுற்றுடலைப் பாதுகாத்து பேணுவதற்கு, முதலில், பாடசாலை மாணவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக கட்டுரை நாடகப்போட்டிகளையும் கண்காட்சிகளையும், நடாத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

கிராமசேவையாளர் பிரிவுகளிலும், பின்பு உதவி அரசாங்க அதிபர் பிரிவு மட்டத்திலும், தனியார் நிறுவனங்களின் உதவியுடன் சுற்றுடலை பாதுகாப்பது சம்பந்தமான ஆக்கபூர்வமான செயல்பாடுகளை நடாத்துவதென்று முடிவு செய்யப்பட்டது. (வி)

## தமிழ் மொழியில் பிரசுரம் வெளியாகவில்லை

(கொழும்பு)

போதைப் பொருள் பாவனை தடுப்பியக்கம் இதுவரை எந்தவொரு பிரசுரங்களையும் தமிழில் வெளியிடவில்லை.

பெருந்தொகையான வெளிநாட்டுப் பணத்தை உதவியாகப்பெறும் இந்நிறுவனத்தின் நடவடிக்கைகள் அனைத்தும் சிங்களப் பிரதேசங்களில் மட்டும் நடைபெற்றுவருகின்றன

இது குறித்து வடபகுதியிலுள்ள அரசசார்பற்ற நிறுவனம்ஒன்று சம்பந்தப்பட்ட நிறுவனத்துடன் தொடர்பு கொண்டபோது இவ்உண்மை வெளியாகியுள்ளது. (எஸ்)

## நிலக்கரி மின்சார நிலையம்

(திருமலை)

திருக்கோணமலையில் நிலக்கரி மின்சார நிலையம் அமைக்கப்படவுள்ளது. இதற்கான அங்கீகாரத்தை அமைச்சரவை அண்மையில் வழங்கியுள்ளதாகக் கூறப்படுகின்றது

மேற்படி நிலக்கரி மின்சார நிலையம் 1997ம் ஆண்டுக்கு முன்னர் நிறுவப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டது. (வி)

## இரத்ததானம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பொதுமருத்துவமனை இரத்தவங்கியில தற்போது நிலவும் இரத்தம் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்யுமுகமாக தொழில்நுட்பக்கல்லூரி மாணவிகள் நேற்று இரத்த வங்கியில இரத்ததானம் செய்துள்ளனர். 15 மாணவிகள் வரையில் இரத்தம் வழங்கினர். இன்னும் பல மாணவிகளிடமிருந்தும் பிறிதொரு தினத்தில் இரத்ததானம் பெறப்படவுள்ளது. (56)

## இன்று

### மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் தெற்கு ஸ்ரீவீரபத்திரசுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவம் இன்று சனிக்கிழமை காலை 11-00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். அடுத்த மாதம் 5-ம் திகதி இரதோற்சவமும், 6-ம் திகதி தீர்த்தோற்சவமும் இடம் பெறும்.

### வருடாந்த உற்சவம்

(கொழும்புத்துறை)

சாவகச்சேரி அருள்மிகு ஸ்ரீ வாரிவனேஸ்வரர் சிவன் கோவில் வருடாந்த உற்சவம் இன்று சனிக்கிழமை காலை 10-00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் உற்சவம் நடைபெறும்.

5ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை தேர் உற்சவமும் 6ம் திகதி திங்கட்கிழமை ஆனி உத்தரம் தினத்தில் தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (154)

### கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பரி.யோவான் ஆலய மண்டபத்தில் இன்று சனிக்கிழமை காலை ''திருச்சபையும் நம்நாட்டு மயமாக்கலும்'' என்னும் பொருள்பற்றி கருத்தரங்கொன்று நடைபெறவுள்ளது.

அருட்கலாநிதி ஏ. ஜே. வி. சந்திரகாந்தனும், அருட்திரு. ஐசக் செல்வரத்தினமும், மேற்படி கருத்தரங்கில் சிறப்புரையாற்றவுள்ளார்கள். (வி)

### பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். கனகரத்தினம் ம. ம. வி. வருடாந்த பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் நினைவுதினமும் இன்று காலை 9 மணிக்கு அதிபர் திரு. மு. இராமலிங்கம் தலைமையில் நடைபெறும்.

இவ்வைபவத்திற்கு பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா தம்பதியர் கலந்து கொள்வர். நிறுவுனர் நினைவுரையை வடமாகாண இணைக்கப்பட்ட பல்கலைக் கழக கல்லூரி பதில் பணிப்பாளர் கலநிதி சு. மோகனதாஸ் நிகழ்த்துவார்.

### விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கீழ் உள்ள விளையாட்டுக்கழகங்களிடையே வருடாந்தம் நடாத்தப்படும் மெய்வல்லுநர் போட்டி இன்றும் நாளையும் நடைபெறவுள்ளது.

பிரதி மாவட்ட ஆணையாளர் திரு. து. வைத்திலிங்கம் இவ்வைபவத்துக்கு பிரதம அதிதியாகக் கலந்து கொள்கின்றார். (வி)

## தஞ்சம் புகும் அகதிகளை பராமரிக்க ஆலோசனை

(உடுவில்)

இராணுவ நடவடிக்கைகளினால் இடம் பெயர்ந்து அகதிகளாகவரும் குடும்பங்களை வலிகாமம் தெற்கு உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தஞ்சம் புகுவோரை எவ்வாறு ஆதரிப்பது அவர்களுக்கு உதவுவது என்பது பற்றிய ஆலோசனைக் கூட்டம் உடுவில் உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தில் நடைபெற்றது.

உதவி அரசாங்க அதிபர் செல்வி தனுஜா தணிகாசலம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் சர்வோதயம், செஞ்சிலுவைச் சங்கம், தமிழர் அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் ஆகிய ஸ்தாபனங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் பலர் கலந்துகொண்டனர்.

இடம் பெயர்ந்து ஓடிவரும் அகதிகளுக்கு முதல் மூன்று நாட்களுக்கு செஞ்சிலுவைச் சங்கம் மூலம் சமைத்த உணவுகளை வழங்குவது அதனைத் தொடர்ந்து அரசாங்கம் உலர் உணவுகளையும் நிவாரணங்களையும் வழங்கும்வரை சர்வோதய ஸ்தாபனம் அவர்களுக்கு வேண்டிய வசதிகளையும் நிவாரணங்களையும் வழங்கிப்பராமரிப்பது எனவும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (109)

## ஆணைக்குழு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

1-6-89ல் இருந்து போட்டிப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்டு கடமைபுரியும் தரம் 1, 2, 3க்கான பாடசாலை அதிபர்களை சேவையில உறுதிப்படுத்துவதற்கு கல்விச் சேவை ஆணைக்குழு நடவடிக்கை எடுதது வருகின்றது.

யாழ். மாவட்டத்தில் உள்ள இந்த அதிபர்களின் விபரங்களை கோட்டங்களிலிருந்து அனுப்பி வைக்குமாறு யாழ். கல்விப்பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் கோரிக்கை விடுத்துள்ளார். (சு)

## க.பொ.த.பரீட்சை விண்ணப்பம்

[உடுவில்]

இவ்வருடம் டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள க. பொ. த. [சாதாரண தரம்] பரீட்சைக்குத் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் விண்ணப்பம் அனுப்ப வேண்டிய இறுதித் திகதி யூன் மாதம் 30ம் திகதியாகும் பாடசாலைப் பரீட்சார்த்திகளுக்கும் இத்திகதியே விண்ணப்ப முடிவுத் திகதியாக இருந்தும், விண்ணப்பத்துக்குரிய விண்ணப்பப் படிவங்கள் இதுவரை பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பிவைக்கப்படவில்லையென அறியப்படுகின்றது.

தனிப்பட்ட பரீட்சார்த்திகள் ஒரு பாடத்திற்கு 15 ரூபா, 2 பாடங்களுக்கு 20 ரூபா, 3 பாடங்களுக்கு 25 ரூபா, 4 பாடங்களுக்கு 30 ரூபா, 5 பாடங்களுக்கு 40 ரூபா, 6 முதல் 8 பாடங்களுக்கு 50 ரூபாவைக் கட்டணமாச் செலுத்திப் பற்றுக் சீட்டை விண்ணப்பத்தில் ஒட்டி அனுப்பவேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. [109]

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். விழிப்புலனற்றோர் வருடாந்த பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமைகாலை கைதடி விழிப்புலன, செவிப்புலன் அற்றோர் பாடசாலையில் நடைபெறும். இக்கூட்டத்திற்கு சங்கதலைவர் ஆ. இரவீந்திரன் தலைமை தாங்குவார். (எஸ்)

## பெருமாள் கோவில் சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ் வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் கோவில் சங்காபிஷேகம்நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

பிற்பகல் 4 மணி முதல் 5 மணிவரை கம்பன் கழக அமைப்பாளர் திரு.இ. ஜெயராஜ் பணிந்தேற்றறிந்தேன்' எனும் பொருள் பற்றி சொற்பொழிவாற்றுவார் இதை தொடர்ந்து சுவாமி வெளிவீதி உலாவருதல் இடம் பெறும்.

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை சன சமூக சமாசத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை யாழ். வை. எம். ஸி. ஏ. கட்டிடத்துக்கு அருகாமையிலுள்ள சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தில் நடைபெறவுள்ளது. (வி)

## சிறுமி மரணம்

(பண்டத்தரிப்பு)

பலத்த தீக்காயங்களுடன் யாழ். அரசினர் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பண்டத்தரிப்பு காலையடிஎன்னுமிடத்தைச் சேர்ந்த 12 வயதுடைய சிறுமி ஒருவர் மரணமானார். (72)

# மண்ணெண்ணெ விளக்கால் கண்பார்வை பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்திலுள்ள பெருந்தொகையான மாணவர்களுக்குக் கண்பார்வைக் குறைவு ஏற்பட்டு வருவதை அவதானிக்க முடிவதாக யாழ் போதனா வைத்தியசாலை கண் சிகிச்சை நிபுணர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

போர்க்காலச் சூழ்நிலையில் மாணவர்கள் அதிக நேரம் மண்ணெண்ணெ விளக்குகளில் படிப்பதே இக்குறைபாடு உருவாகுவதற்குக் காரணம் என அவர் கூறினர். காலப்போக்கில் இக்குறைபாடு அதிகரிக்குமெனவும் அவர் தெரிவித்தார்.

யாழ். ரோட்டறிக் கழகத்தின் அனுசரணையுடன் சர்வதேச உதவியைப் பெற்று கம்பியூட்டர் மூலம் கண் சிகிச்சை அளிக்கும் சாதனமொன்றைத் தருவிப்பதற்கு வைத்திய நிபுணர்கள் முயற்சியை மேற்கொண்டு வருகின்றனர். இச் சாதனம் கொழும்பில் தனியார் நிறுவனமொன்றில் மட்டும் உள்ளது. (எஸ்)

## நிற்சாமத்தில் தஞ்சம்

(சித்தன்கேணி)

மாதகலில்இருந்துஇராணுவ நடவடிக்கை, பிதிகாரணமாக இடம்பெயர்ந்த சுமார் 90 குடும்பங்கள் சங்கானை நிற்சாமத்தில் தஞ்சமடைந்துள்ளனர்.

இவர்களுக்கான நலன்களை சங்கானை மேற்கு கிராமஉத்தியோகத்தர் திரு. என். மகிழ்ராசா கவனித்துவருகின்றார். (137)

## பதவிக் காலம் நீடிப்பு

(கொழும்பு)

பொலிஸ் மாஅதிபர் ஏர்னஸ்ட் பெரேராவின் பதவிக் காலம் மேலும் ஒரு வருடத்துக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

தற்போது பதவியிலிருக்கும் இராணுவ உயரதிகாரிகளின் பதவிக் காலங்களும் ஏற்கனவே நீடிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (கே)

## முகமட் மகன் லலித் கட்சியில்

[கொழும்பு]

நாடாளுமன்ற சபாநாயகர் எம். எச். முகமட்டின் மகனும், மாகாணசபை பிரதிநிதியுமான சாகுல் ஹமீத் முகமட், லலித் கட்சியோடு தொடர்பு வைத்துள்ளாரென ஐ. தே. கட்சி வட்டாரங்களில் பலத்த ஊகங்கள் தெரிவிக்கின்றன.

விரைவில் இவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க இருக்கின்றது எனவும் தெரிய வருகிறது. (சு)

## சந்தானத்துக்கு அஞ்சலி

(சென்னை)

புகழ்பெற்ற கர்நாடக இசைப்பாடகர் மகாராஜபுரம் சந்தானத்தின் மறைவு கர்நாடக இசை உலகுக்கு பேர் இழப்பாகுமென்று ஜனாதிபதி வெங்கட்ராமன் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

கர்நாடக இசை உலகில் ஒருவெற்றிடத்தை ஏற்படுத்தி விட்டதாக திரு. சந்தானத்தின் மறைவு குறித்து தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா தெரிவித்துள்ளார். (கே)

## அரியாலை சாம்பியன்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் தெற்கு சனசமூக நிலையத்தினல் நடாத்தப்பட்ட வலைபந்தாட்டப்போட்டியில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழகம் சாம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துள்ளது.

திரு. ஆ. வே துரைரெட்டினம் தலைமையில் நடைபெற்ற மேற்படி இறுதிப்போட்டிககு புனர்வாழ்வுப் பணிப்பாளர் திரு. செ. பத்மநாதன் பிரதம அதிதியாகவும், கரபந்தாட்டச் சங்கத் தலைவர் திரு. டி. ஏ. எம். குணசிங்கமும் உதைபந்தாட்ட லீக் தலைவர் திரு. எஸ். ரி. கணநாதனும் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர். (வி)

## நூல்கள் அன்பளிப்பு

[கொழும்புத்துறை]

வடமாகாணம் தெங்குபனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசம் யாழ். அரசினர் வைத்தியசாலை நோயாளர் நலன் புரிச்சங்கத்தின் நூலகசேவைக்காக பெரும்பாலான புத்தகங்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

சுமார் மூவாயிரம் ரூபா பெறுமதியான நூல்கள் கடந்த மாதம் 20 திகதி புதன்கிழமை நோயாளர் நலன்புரிச் சங்க நிர்வாகத்தினரிடம் கையளிக்கப்பட்டுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது. (155)

## மெய்வல்லுநர் போட்டி

(மானிப்பாய்)

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கழகங்களுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டி ள் எதிர்வரும் 28-ம் 29ம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் க. கனகரத்தினம் தலைமையில் அத்தியார் இந்துக் கல்லூரி மைதானத்தில் பி ப. 1 30 மணியளவில் நடைபெறும் இவ்வைபவத்திற்கு பிரதம விருந்தினராக மாவட்டப் பிரதி ஆணையாளர் திரு து. வைத்திலிங்கம் கலந்து கொள்வார். (71)

## 4-வது ஆண்டு நிறைவு விழா

(மானிப்பாய்)

நவாலி முருகானந்தா சனசமூக நிலையத்தின் 41-வது ஆண்டு நிறைவு விழா வினையொட்டி கடந்த 21ந் திகதி இல்ல விளையாட்டுப் போட்டிகளும், நாடகப்போட்டி, பேச்சுப்போட்டி என்பனவும் இடம்பெற்றன.

நிலையத் தலைவர் வே. சிற்றம்பலம் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்திற்கு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் சுந்தரம் டிவகலாலா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். (71)

# கெயர் யு. எஸ். எயிட் திட்டத்தின் கீழ் தென்மராட்சியில் 125 ஏக்கரில் குரக்கன் உற்பத்தி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

கெயர் யுஎஸ் எயிட் விவசாய திட்டத்தின் கீழ்தென்மராட்சி பகுதியில் அறவழிப்போராட்டக்குழுவின் ஆதரவில் 125 ஏக்கரில் குரக்கன் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மீசாலை, கைதடி, சந்திரபுரம், மட்டுவில் சரசாலை, கல்வயல் சாவகச்சேரிவடக்கு பகுதிகளில் ஐந்நூறு விவசாயிகள் குரக்கன் செய்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்களுக்கான விதை, உரம், மண்ணெண்ணெ, மண்வெட்டி போன்ற உள்ளீட்டுப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே தென்மராட்சிப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டிருந்த 2-ம் கட்ட விவசாய திட்டம் வெற்றி அளித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இரண்டாம் கட்ட திட்டத்தில் மரக்கறி, மரவள்ளி கிழங்கு, பயறு, எள்ளு போன்றவை உற்பத்தி செய்யப்பட்டன.

இத்திட்டத்தில்உதவிபெற்ற விவசாயிகளில் 90வீதமானவர்கள் தமதுமீளழிப்புகளை வழங்கியுள்ளார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

கெயர் அறவழி இணைந்து தென்மராட்சிப் பகுதியில நடத்திவரும் இத்திட்டம் மூலம் தாங்கள் பெரும்பயனை அடைந்துள்ளதாக இப்பகுதிலுள்ள விவசாயிகள் தெரிவித்தனர்.

வறிய கூலி விவசாயிகளுக்கு இத்திட்டமான பேருதவியாக அமைந்துள்ளதாகவும் தொடர்ந்தும் ஒவ்வொருவருடமும் இத்திட்டத்தை நடைமுறைப் படுத்த வேண்டும் என்றும் தமது பகுதிகளிலுள்ள விவசாய நிலங்களில மண் பரிசோதனை செய்து எம்மண்ணில் என்ன பயிரை மேற்கொள்ள முடியும் என்பதனை கண்டறிவதற்கு உதவவேண்டும். பல விவசாயிகள் அறவழிப் போராட்டக்குழுவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தற்போது வழங்கப்பட்டிருக்கும் உள்ளீடுகளைப்போன்று யூரியா, உரம் மற்றும் பெற்றோல் போன்ற எரிபொருள்களையும் விவசாயிகளுக்குப் பெற்றுத்தரவேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கெயர் யு எஸ் எயிட் விவசாயத்திட்டத்தின் தென்மராட்சி கிளையினராக செயற்பட்டு வரும் அறவழிப்போராட்டக்குழுவின் இத்திட்டத்தின் இணைப்பாளராக உமாகாந்தன், களமேற்பார்வையாளர்களாக யோ. தருமநாதன். எஸ் கே தேவசகாயம் ஆகியோர் கடமையாற்றி வருகின்றனர். (ரி)

# சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுசங்க சமாசங்களின் 10வதுஆண்டு நிறைவுவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின சமாசம் நடாத்தும் 10வது ஆண்டு நிறைவு விழாவின் 2ம் நாள் நிகழ்ச்சிகள் நாளை காலை 9 மணிக்கு திரு க. மகாதேவன் தலைமையில் நடைபெறும்

சிறப்புரைகளை தொடர்ந்து மலா வெளியீடு நடைபெறும். மலர் வெளியீட்டுரையை டபிள்யூ ஜே. சூசைரட்ணம் நிகழ்த்துவார். விமர்சன உரையை பேராசிரியர் என். பாலகிருஷ்ணன், திரு. க. திருச்சிற்றம்பலம், திரு. யோகரட்ணம் யோகி ஆகியோர் நிகழ்த்துவர்.

இறுதியில் கலை நிகழ்ச்சிகளாக குழுப்பாடல், வில்லுப்பாட்டு, கிராமிய நடனம், நாடகமும் இடம்பெறும், (சி)

## இராசி பலன்

27-06-1992

சனிக்கிழமை

(தமிழுக்கு ஆனி 13)

துவாதசி மு இ 11-16 வரை, கார்த்திகை வைகறை 5-40 வரை, அமிர்தயோகம் இராகுகாலம் காலை8-55 முதல் 10-25 வரை. சுபநேரம் பகல் 2-55 முதல் 4-25 வரை.

மேடம்: தொழில் மந்தம், மருத்துவச்செலவு, வீண் முயற்சி.

இடபம்: கௌரவ சிறப்பு, பொருள் வரவு, காரியசித்தி.

மிதுனம்; அன்னியர் சங்கடம், உறவினர் பகை, கடும் செலவு.

கடகம்: தோல்வி பயம், மேலதிகாரிகள் நன்மை, பண வரவு.

சிங்கம்: குடும்பசுகம். பயண அனுகூலம், புதிய உறவு.

கன்னி: விரோதமான செயல், நோய்பாதிப்பு, அலைச்சல.

துலாம்: தனிமைப்படல், மனச்சஞ்சலம், அநாவசிய பகை.

விருச்சிகம்; குடும்பமகிழ்ச்சி தொழில் பயம், பிதாஉதவி.

தனுசு: சூழ்ச்சிகள் அம்பலமாகும், கல்விஞானம், பாராட்டு.

மகரம்: தடுமாற்றம், அநாவசியபணம், யோசனை.

கும்பம்: விதண்டாவாதம், குடும்பபிரிவு, சகோதர துன்பம்.

மீனம்: தியாகசிந்தை, புதிய ஸ்தானம், சுபகாரியம்

—ஜோஸ்யர்

# கடிதங்கள், புகைப்படங்களை கையாடும் இராணுவம்

(வவுனியா)

வெளிநாடுகளிலிருந்து வடபகுதிக்கு வவுனியாவுக்கு அனுப்பப்படும் கடிதங்கள், புகைப்படங்கள் மற்றும் காசோலைகளை ஸ்ரீலங்கா இராணுவத்தினர் கையாடுவதாக அண்மைய செய்திகள் தெரிவிக்கின்றன.

சோதனை என்ற பெயரில் வவுனியா தபாலகங்களில் உள்ள கடிதங்களை எடுத்துக் கொண்டு போகும் இராணுவம் மேற்குறிப்பிட்ட பொருட்களை கையாடிவிட்டு மிகுதியை மாத்திரம் தபாலகத்திடம் திரும்ப கையளிக்கிறதாம்.

இராணுவத்தினரின் மேற்குறித்த நடவடிக்கையால் வவுனியா பிரதம தபாலக ஊழியர்கள் செய்வதறியாது திகைத்துள்ளனராம். (க)

# தீவக மாணவர்களின் கல்வி பெரும் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

தீவகத்திலிருந்து இடம் பெயர்ந்து வந்த மாணவர்கள் அடிப்படை வசதிகள்இல்லாது யாழ். மாவட்டத்தில கல்வியைத் தொடரும் துக்கரமான நிகழ்வுகளை ஆதாரம் காட்டி வேலணைக் கோட்ட கல்விப் பணிப்பாளர் சி. புலேந்திரன் யாழ். அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகருக்கு மகஜர் ஒன்றைச் சமர்ப்பித்துள்ளார்.

இந்த மகஜரில், போதிய தளபாடம் மலசலகூட வசதிகள் போதியளவு இல்லாது இருப்பது பற்றியும், தனியார் பாடசாலைகளில் கல்வி கற்கும் அந்த மாணவர்களுக்கு மேலதிக கொட்டில்கள் போட்டு வசதி செய்து தருமாறும் கோரப்பட்டுள்ளது எனத் தெரிய வருகிறது. (சு)

# அகதிகளாக இடம்பெயர்ந்த நடுத்தர சம்பளம்பெறுவோர் நிவாரணமின்றி பாதிப்பு

(காங்கேசன்துறை)

இடம் பெயர்ந்த அரச, கூட்டுத்தாபன ஊழியர்களில் நடுத்தர சம்பளத்தைப் பெறும் ஊழியர்கள் எவ்வித நிவாரணமும் இன்றி வாழ்க்கைச் செலவை ஈடு செய்ய முடியாமல் அவதியுறுவதால் தமக்கு மாதம் இரு தடவை யாவது இலவச நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட வேண்டுமென மேலிடத்திற்கு கோரிக்கை விடுப்பது பற்றி ஆராய்ந்து வருகின்றனர்.

அரச துறையிலும், கூட்டுத்தாபனங்களிலும் பணிபுரியும் நடுத்தர சம்பளத்தைப்பெறும் ஊழியர்கள் பலர் இராணுவ நடவடிக்கையால் இடம் பெயர்ந்து கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு தமது வாழ்க்கையை நடத்தமுடியாமல் கஷ்டமுறுகின்றனர்.

1500 ரூபாவுக்கு மேல் வருமானம் பெறுவோருக்கே நிவாரணம் இல்லை என்ற நிலையில் எவ்வித நிவாரணமும் இன்றி வாழ்க்கைச்செலவைச் சமாளிக்க முடியாமல் கஷ்டமுறும் இந்த ஊழியர்கள் தமக்கு மாதம் இரு தடவை யாவது இலவச நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட வேண்டுமென மேலிடத்திற்கு கோரிக்கை விடுக்க முன்னேற்பாடுகளைச் செய்து வருகின்றனர்

அலுவலக மட்டத்தில் ஊழியர்களிடையே ஒருமித்தகருத்தைத் திரட்டி தொழிற்சங்க அமைப்பின் ஊடாக இக்கோரிக்கையை வலியுறுத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (86)

## வீதி விபத்தில் படுகாயம்

[யாழ்ப்பாணம்]

கொம்படியில் இருந்து மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்த இருவர், பள்ளத்தில் வீழ்ந்து தூக்கிஎறியப்பட்டு பலத்த காயங்களுக்குள்ளாகி, யாழ் வைத்தியசாலையில் அநுமதிக்கப்பட்டுள்ளனர்.

அல்வாய் வதிரியைச் சேர்ந்த கதிரவேலு பரமானந்தம் [39 வயது], கா. தங்கேஸ்வரன் [45 வயது] ஆகியோர் பலத்த காயங்களுக்குள்ளாகி மந்திகை வைத்தியசாலையில் அநுமதிக்கப்பட்டுள்ளனர். (56)

# "பேராசிரியர் சரவணபவானந்தன் இந்த மண்ணுக்கு சேவை செய்தவர்"

## — பேராசிரியர் துரைராசா —

(யாழ்ப்பாணம்)

"எமது பல்கலைக் கழகத்தில் சேவையாற்றிய கல்விமான்களில் அநேகர் எமது பிரதேசத்தை விட்டுச் சென்று விட்டார்கள். ஆனால் பேராசிரியர் சரவணபவானந்தன் இந்த மண்ணில் சேவை செய்யவேண்டும் என்று முழுமையாகத் தன்னை அர்ப்பணித்தவர்.

இவ்வாறு அமரர் பேராசிரியர் சரவணபவானந்தன் நினைவஞ்சலிக் கூட்டத்தில் யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா தெரிவித்தார். நேற்று அஞ்சலிக் கூட்டம் யாழ் பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது;- பேராசிரியர் சரவணபவானந்தனின் மறைவு யாழ் பல்கலைக் கழகத்துக்கு மாத்திரமல்ல முழுத் தமிழ் சமுதாயத்துக்குமே ஒரு பேரிழப்பாகும்.

எமது பிரதேசத்தை ஆக்கிரமிப்பதற்குப் பல சக்திகள் செயற்பட்டு வருகின்ற இந்த நேரத்தில் எமது பல்கலைக் கழகத்தை மூடவிடாது பாடுபட்டு வந்தவர்

யாழ். பல்கலைக் கழக மருத்துவ பீடத்துக்குச் சோதனை மேல் சோதனை ஏற்படுகின்றது. இதனால் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், ஊழியர்கள் நிர்வாகத்தினர் மாணவர்கள் மனத்தைத் தளரவிடாமல் தொடர்ந்து பணி செய்ய வேண்டும்.

பேராசிரியர் 1961ம் ஆண்டு மருத்துவத்துறையில் பட்டம் பெற்றார். சட்ட வைத்திய அதிகாரியாக கொழும்பு கண்டி யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் கடமை புரிந்தார்.

1980ம் ஆண்டு யாழ். பல்கலைக் கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளராக கடமை பார்த்த அவர், 1982ம் ஆண்டு சட்ட மருத்துவத்துறைக்குப் பேராசிரியரானார்.

கூட்டத்தில் மருத்துவ பீடாதிபதி கலாநிதி பாலசுப்பிரமணியம், விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் மகேஸ்வரன், கலைப்பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை மற்றும் பலர் பேராசிரியர் சரவணபவானந்தனின் சேவைகளைப் பாராட்டிப் பேசினார்கள். [சு]

# ராவை பிரமிக்கவைத்த இயந்திர மனிதன்

(டோக்கியோ)

இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் அண்மையில் மேற்கொண்ட ஜப்பானிய விஜயத்தின்போது உலக தலைவர் எவருக்கும் கிடைக்காத கைகுலுக்கல் அனுபவம் ஒன்று அவருக்கு கிடைத்துள்ளது.

சாதாரணமாக அரசியல் தலைவர்கள் அந்நியநாடுகளுக்கு விஜயம் மேற்கொள்ளும்போது அந்நாட்டு தலைவர்கள் கைலாகு கொடுத்து வரவேற்பது வழமை.

ஆனால் பிரதமர் ராவை கைலாகு கொடுத்து வரவேற்றவன் 'ரோபோ' என அழைக்கப்படும் இயந்திர மனிதன்.

ஜப்பானில் இடம்பெற்ற அறிவியல் கண்காட்சிக்கு பிரதமர் ராவ் விஜயம் மேற்கொண்டபோதே ரோபோ இயந்திர மனிதன் பிரதமர் ராவுக்கு கைலாகு கொடுத்ததோடு மட்டுமன்றி சரளமாக ஆங்கிலத்தில் உரையாடவும் செய்தான். அதுமட்டுமன்றி கைகுலுக்கும்போதே பிரதமர் ராவ் பிடியின் வலிமை எத்தகையது என்பதையும் கணிப்பிட்டு கூறியதோடு அவரது ஓவியம் ஒன்றையும் வரைந்து அவருக்கு அன்பளிப்பாக வழங்கினான். (க)

# கொலம்பியாவின் நீண்ட விண்வெளி பயணம்

[நியூயோர்க்]

கொலம்பியா நேற்று முன்தினம் மேற்கொண்ட விண்வெளிப் பயணம் நீண்ட பயணம் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தவிண்வெளிபயணத்தை நீடிப்பது பல்வேறு புதிய தகவல்களை அளிக்குமென நாசா நிறுவனம் நம்புகிறது.

நாசா வருங்காலத்தில் மேலும் பல நீண்ட விண்வெளிப்பயணங்களுக்கு திட்டங்கள் வகுக்கப்படும் என்றும கூறப்படுகிறது.

விண்வெளியில் பளிங்குகளை வளர்க்கும் பரிசோதனையும், எயிட்ஸ் நோயையும், ஏனைய நோய்களையும் குணப்படுத்துவதில பயன்படுத்தக் கூடிய மருந்துகளைக் கண்டு பிடிக்கும் முயற்சிகளையும் துரிதப்படுத்த கொலம்பியா பயணம் பயன்படுத்தப்படுகிறது.

வளியில்லாத வெளியில் மனிதர்கள் எவ்வாறு நடந்து செல்வார்கள் என்று பரிசோதனைகளும் இந்தப் பயணத்தின் போது நடத்தப்படவிருக்கிறது. [மா]

# தமிழகத்தில் 88 ஆயிரம் இலங்கைத் தமிழ் அகதிகள்

(சென்னை)

தமிழகத்தில் 18 மாவட்டங்களில் 163 முகாம்களில் 80 ஆயிரம் இலங்கைத் தமிழ் அகதிகள் வாழ்வதாக அகதிகள் புனர்வாழ்வு பொறுப்பாளர் சி. என். இராமதாஸ் தெரிவித்துள்ளார்.

மழைகாரணமாக இலங்கையின் விமான தளங்கள் சீரில்லாதபடியால் இந்திய போயிங் விமானம் அங்கே இறங்க முடியாமல் இருக்கின்றது. அதனால்தான் இப்போது அகதிகளை அனுப்பும் பணி ஒத்திப் போடப்பட்டுள்ளது.

இதுவரை 23,126 அகதிகளை இலங்கைக்கு அனுப்பியிருப்பதாகவும் நாடு திரும்ப விருப்பம் தெரிவித்துள்ள 6700 பேர் அடுத்த கட்டமாக அனுப்பப்பட உள்ளனர் என்றும் திரு. இராமதாஸ் மேலும் தெரிவித்தார். (சு)

# கதிர்காமம் ரயில் பாதை வேலைகள் ஆரம்பம்

[கொழும்பு]

கதிர்காமத்துக்கும் மாத்தறைக்குமிடையில் புதிய ரயில் பாதைகள் அமைக்கும் வேலைகள் கடந்தவாரம் ஆரம்பிக்கப்பட்டன.

இதேபோல பட்டக்களப்பு-பொத்துவிலுக்குமிடையிலான புதிய ரயில் பாதைகள் அமைக்கும் வேலைகளும் மிகவிரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

மேற்படி இரு ரயில் பாதைகளும் மூன்றுவருடங்களுக்குள் பூர்த்தியடைந்து விடுமென்று போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சர் திரு விஜயபால மெண்டிஸ்தெரிவித்தார். (வி)

# சாவகச்சேரியில் ஹெலி சூடு

[யாழ்ப்பாணம்]

சாவகச்சேரிப் பகுதியில் நேற்று முன்தினமிரவு சுமார் 9 மணியளவில் சிறிலங்கா அரசுக்குச் சொந்தமான ஹெலிக்கொப்டர் ஒன்று சரமாரியாக துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டது. (க)

# இந்திய விமானங்களில் பெண் விமானிகள்

(புதுடில்லி)

இந்திய விமானப் போக்குவரத்துத்துறையில் விரைவில் பெண் விமானிகளும் சேவையில் ஈடுபடுத்தப்படுவார்கள் என மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் சரத் பவார் தெரிவித்துள்ளார்.

ஐதராபாத்தில் நேற்று பத்திரிகையாளர் மநாட்டில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: புதிதாக சேரும் பெண் விமானிகள ஆரம்பத்தில் ஹெலிகாப்டர்கள் செலுத்துவதற்கு பயன்படுத்தப்படுவர். (க)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

கிராம அபிவிருத்தி சம்பந்தமான கருத்தரங்கொன்று இன்று சனிக்கிழமை பிற்பகல் யாழ் செயலகத்தில், பிரதி ஆணையாளர் திரு து. வைத்திலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக் கருத்தரங்கை யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் ஆரம்பித்து வைப்பார். (வி)

## வெள்ளிவிழா

(யாழ்ப்பாணம்)

கைதடி நவில்ட் செவிப்புலனிழந்தோர் பாடசாலை பழைய மாணவர் சங்க "வெள்ளிவிழா" இன்று கைதடி நவில்ட் பாடசாலையில் தலைவர் திரு. அ. ஜோ. பாலநாயகம் தலைமையில் கொண்டாடப்படவுள்ளது.

காலை பத்து மணிக்கு ஆரம்பமாகும் வெள்ளி விழாவில் சங்க வருடாந்த கூட்டம் நடைபெற்றபின் சிறப்பு விருந்தினர்கள் திரு. பா நடேசன் (காவல்துறை பொறுப்பாளர்), டாக்டர் ஜெயகுமார் ஆகியோர் உரையாற்றுவர்.

தொடர்ந்து நிகழ்ச்சிகள் நடைபெற்று பி. ப. 3-30 மணிக்கு கலை நிகழ்ச்சிகளும் பரிசளிப்பும் இடம்பெறும்.

## அரசுக்கு எதிராக

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

களில் பட்டாசுகளைகொளுத்தி சப்தங்களை எழுப்பவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (மா)

## போலி குடியேற்றத்தை

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

குள் நுழைய முற்படுபவர்களை கட்டுப்படுத்தும் முகமாகவே இந்த சட்டம் கனடா நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டுள்ளது. (வி)

## கொள்ளையரிடம்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கரித்துக் காணப்படுவதாகவும் கொள்ளையர்களினால் பாதிக்கப்பட்ட மக்கள், கொள்ளையர்கள் மிக நவீன ஆயுதங்களைக் காண்பித்து தம்மிடம் கொள்ளை அடித்தார்கள் என்றும் பொலிசாருக்கு முறையிட்டுள்ளதாக பொலிஸ் தலைமைச் செயலகம் மேலும் தெரிவித்துள்ளது. (வி)

## வடக்கு-கிழக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வாழ்க்கை செலவினத்தை ஈடு செய்யும் வகையில் புதிய சம்பளத் திட்டம் அமுல்படுத்தவேண்டியதன் அவசியத்தை அரசு உணர்ந்துள்ளது.

இதற்கென அரசாங்க தேசிய சம்பளத் திட்டம் ஒன்றை விரைவில் அறிமுகப்படுத்தவுள்ளது. இதன் பொருட்டு புதிய குழு ஒன்றும் நியமிக்கப்படவுள்ளது. (க)

## கொழும்புத்துறைமுகத்தில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தீ பற்றிக்கொண்டது என்றும் தீயணைக்கும் படையினர் தீயை அணைத்துக் கட்டுப்படுத்தினர்

ஆனால் இப்பகுதிகளில் கப்பலிலிருந்து இறக்கிவைக்கப்பட்டிருந்த பல லட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் எரிந்து சாம்பலாகிவிட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

துறைமுகத்தின மற்றைய பகுதிகளுக்கும் தீ பரவாமல் இருப்பதற்கு தீயணைக்கும் படையினர் பல மணி நேரம் போராடினர்.

இது ஒரு திட்டமிட்ட நாசவேலை என்று பொலிசார் தெரிவித்துள்ளபோதிலும் இது சம்பந்தமாக எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லையென்றும் கூறப்படுகின்றது. (வி)

## படையினர்மூலம்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

சினால் வழங்கப்படும் எந்தவித நிவாரண உதவியும் வழங்கப்படுவதில்லையென தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு குடியேற்றப்பட்ட தமிழர் தமது சொந்த வயல்களில் பயிர்ச்செய்கையில் ஈடுபட முனைந்தால் சிங்களவர், முஸலிம்களால் தடுக்கப்படுவதாகவும் அங்கிருந்துவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இத்தகைய சம்பவங்களைத் தடுத்து நிறுத்தும்படி திருமலை இந்து இளைஞர் பேரவைமூலம் அரசுக்கு அறிவித்திருந்தும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படாமல் சிங்களவர், முஸ்லிம்களின் அடாவடித்தனம் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க)

## ஜெயலலிதாவுக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வித்திருந்த குற்றச்சாட்டுகள் குறித்து பதில் கூறுகையில், அவர் மேலும் தெரிவித்ததாவது:

அ. தி. மு. க. அரசு "தடா" கைதிகளை கொடுமையாக நடத்துகிறது. எனவே அறப்போராட்டம் ஒன்றிற்கு தி. மு. க. தொண்டர்கள் தயாராகவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். (க)

## ஆயுத விற்பனையாளர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டுவரும் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக பெருமளவு பணத்தை செலவிட வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதே இதற்குக் காரணமாகும்.

கனரக இராணுவ ஆயுதங்களையும் மற்றும் பல்வேறு ஆயுதங்களையும வெடிமருந்து வகைகளையும் இலங்கை வெளிநாடுகளிலிருந்து கணிசமான அளவு இறக்குமதி செய்து வருவது இதற்கு மற்றுமொரு காரணமெனத் தெரிவிக்கப்படுகிறது.

டாங்கிகள், குண்டுவீச்சு விமானங்கள், பீரங்கிக் கப்பல்களின் கொள்வனவு போன்றவையும் ஆயுத விற்பனையாளர்களின் கவனத்தைபெரிதும் கவர்ந்துள்ளது.

எனவே இலங்கையிலிருந்து புதிதாக ஆயுதக் கொள்வனவுக் கட்டளைகளை பெற்றுக்கொள்ளும் நோக்குடன் சர்வதேச ஆயுத விற்பனையாளர்களின் தரகர்கள் இலங்கையை மொய்த்துவிடுவார்கள் என்று இராணுவ நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

## மனித உரிமை

[1ம் பக்கத் தொடர்ச்சி]

களைக் கண்டிப்பதுடன் அவற்றை வெளி உலகுக்கும் தெரியப்படுத்தி இலங்கைக்குக் கிடைக்கும் பல்வேறு வெளிநாட்டு உதவிகளைத் தடைப்படுத்துவதே எமது நோக்கமாகும்.

இதன் மூலம் இலங்கைஅரசு விழிப்படைந்து அது மனித உரிமைகளை மதித்து நடக்கும் என எதிர்பார்ப்பதாகவும் அவர் மேலும் பி. பி. ஸி. க்குத் தெரிவித்திருந்தார்.

இதேவேளையில் பிரிட்டன், ஜேர்மனி, கனடா, சுவிஸ்சல்லாந்து போன்ற நாடுகளில் வசிக்கும் சிங்களவரும் அந்த நாடுகளிலுள்ள மனித உரிமை இயக்கங்கள் மூலமாக இலங்கை அரசுக்கு எதிராகக் கண்டனக் குரல் எழுப்பியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## ராவின்

(1-ம பக்கத் தொடர்ச்சி)

கடந்த மாதம் பிறேசிலின் றியோடிஜெனிரோவில் நடைபெற்ற புவி பாதுகாப்பு உச்சி மாநாட்டில் கலந்துகொள்ளச்சென்ற பிரதமர் நரசிம்மராவின் வேக நடைக்கு ஈடு கொடுக்க முடியாமலே மேற்படி பாதுகாப்பு அதிகாரிகள் திண்டாடியதாக கூறப்படுகிறது.

உங்கள் பிரதமர் மிகவேகமாக நடக்கின்றார். அவரை சற்று மெதுவாகத்தான் நடக்க சொல்லுங்களேன் என்று பிறேசில் பாதுகாப்பு அதிகாரிகள் இந்திய மெய்ப்பாதுகாவலரைப் பார்த்துக் கூறினராம். (க)

## படையினர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு செல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சிறீலங்காப் படையினர் நேற்று முன்தினம் பளுகாமம் பகுதியில் மேற்கொண்ட பாரிய சுற்றிவளைப்பின்போது படையினரால் கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகவும் இளைஞர் பலர் துன்புறுத்தப்பட்டு முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டதாகவும் கூறப்படுகிறது. [க]

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63ம்இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு யூன் மாதம் 27ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a as a News paper at the General Post office Srt Lanka under Licence Number B/10336/81